# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/68 - 2016 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.24

*1994/68 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*2014.08.28 ஆந் திகதிய 1877/28 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014.10.01 ஆந் திகதிய 1882/18 மற்றும் 2016.02.02 ஆந் திகதிய 1952/20 ஆம் இலக்க , இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற விடயங்கள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.*

1. **நடைமுறைப்படுத்தப்படும் திகதி** : *இச்சேவைப் பிரமாணக்குறிப்பு 2006.01.01 ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.*

20. **இடைக்காலம் மற்றும் பதவியுயர்வுகள்** :

20.1 *இடைக்காலம் 2006.01.01 ஆந் திகதியிலிருந்து 2012.06.30 ஆந் திகதி வரை வலுவிலிருக்கும். அக்கால எல்லையினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் பதவியுயர்வுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*20.1.1 சேவையின் II ஆம் தரத்திற்கான பதவியுயர்வு :*

I. *2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்த, III ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர் ஒருவர், இல. 888/2 மற்றும் 1995.09.12 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மற்றும் அதற்கு உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கட்டடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சேவையின் II ஆம் வகுப்பில் II ஆம் தரத்தில் இருந்து II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவது தொடர்பாக பூர்த்தி செய்ய வேண்டிய சகல தகைமைகளையும், தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தும் வகையில், இடைக்காலத்தினுள் II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படும்.*

II. *மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவது சம்பந்தமான சிபார்சுகள், பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும்.*

20.1 .2 சேவையின் I ஆம் தரத்திற்கான பதவியுர்வு :

I. 2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்த II ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அல்லது இடைக்காலத்தினுள் II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள், இடைக்காலத்தினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும், தேவைப்பாடுகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின், அத்தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படும்.

(அ) பதவியுயர்வுத் தினத்தில் இருந்து உடன் முந்திய 5 ஆண்டுகளுள் அனைத்து சம்பள ஆண்டேற்றங்களையும் ஈட்டியிருத்தல் ;

(ஆ) பதவியுயர்வுத் தினத்தில் இருந்து உடன் முந்திய 5 ஆண்டுகளுள் எதுவித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகாதிருத்தல் வேண்டும் ;

(இ) பூரண தொழிற்றுறைத் தகைமைகளைப் பெற்றிருத்தல் மற்றும் தொடர்ச்சியாக கொண்டு செல்லல்.

II. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவது சம்பந்தமான சிபார்சுகள், பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும்.

20.1 .3 சேவையின் விசேட தரத்திற்கான பதவியுயர்வு :

1. 2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்த, I ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அல்லது இடைக்காலத்தினுள் I ஆம் தரத்திற்கு பதவியுர்த்தப்பட்ட அலுவலர்கள், இடைக்காலத்தினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும், தேவைப்பாடுகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின், விசேட தரத்தின் வெற்றிடங்களுக்கு 10.3.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்படும்.

   i. கட்டடக் கலை துறைசார்ந்த பட்டப்பின் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   ii. பதவியுயர்வு தொடர்பாக தகைமை பெறும் தினத்தன்று நிறைவேற்றுத் தர வகுதியின் முதலாவது தரத்தில் ஐந்தாண்டுகால (05) முனைப்புடனானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் முதலாவது தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஆண்டேற் றங்களை ஈட்டியிருத்தல் வேண்டும் ;

   iii. பதவியுயர்வு தொடர்பாக தகைமை பெறும் தினத்தன்று தகைமைபெறும் சேவை வகுதியின்/பதவிகளில் உரிய நிறைவேற்றுத் தரத்தில் 18 ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்புடனானதும் திருப்பதிகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

   iv. பதவியுயர்வு தொடர்பாக தகைமை பெறும் தினத்தன்று உடன் முன்னரான 05 ஆண்டுகால செயலாற்றம் திருப்திகரமானதாகவும், உயர் மட்டத்திலும் இருத்தல் வேண்டும் ;

   v. பூரண தொழிற்றுறைத் தகைமைகளை தொடர்ந்தேச்சையாக பேணல் ;

   vi. பதவியுயர்வு தொடர்பாக தகைமை பெறும் தினத்திற்கு உடன் முன்னரான 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் மற்றும் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு ஆளாகாதிருத்தல் வேண்டும்.

2. இடைக்கால ஏற்பாடுகள் இல. 20 இன் கீழ் சேவைப் பிரமாணக் குறிப்பு உள்ளடக்கப்பட்டமை காரணமாக, "பிற" என்பது, இல. 21 ஆக திருத்தப்படல் வேண்டும்.

3. சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் திகதி திருத்தப்பட்டதன் அடிப்படையில், 2006.01.01 ஆந் திகதியில் இருந்து 2013.04.05 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்படுகின்ற பதவியுயர்வுகள் தொடர்பாக நிலுவைச் சம்பளம் வழங்காதிருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்க,

எச். எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

12- 468

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.